மாண்புமிகு திரு. ஆர். எம் வீரப்பன் : தலைவரவர்களே, அந்த இரண்டாயிரம் ஏக்கர் நிலங்களும் கோவிலுக்குப் போய்விடுகின்றபோது அதை ஆண்டவனே எடுத்து வைத்துக் கொள்ளப்போவதில்லை. அந்த உரிமையை அந்தக் கோவிலுக்குத் தர வேண்டும் என்பதுதான் அந்த ஆலயத்தின் சார்பிலே வைக்கப் படுகின்ற வாதம். அந்த சொத்தை இந்திய அரசுக்குத் கொடுத்து இந்திய அரசு அதை மாநில அரசுக்குக் கொடுத்து பின்னர் மீண்டும் மத்திய அரசு அதை எடுத்துக் கொண்ட பிறகு அதில் 400 ஏக்கர் நிலம் மட்டும் உப்பளமாகப் பயன்பட்டு வருகின்றது. மீதியுள்ள 2,000 ஏக்கர் நிலத்தினை மத்திய அரசு தரிசாகப் போட்டு அநாதைச் சொத்தைப் போல விட்டுவிட்ட காரணத் தால் பலபேர் அதிலே ஆக்கிரமிப்பு செய்திருக்கின்றார்கள். இருந்தாலும் அந்தச் சொத்துக்கள் வேதாரண்யம் கோவிலுக்கு சொந்தமானது என்று அறிவித்து விட்டு அதற்குப் பிறகு அந்த நிலத்தை அனுபவித்துக் கொண்டிருக்கக் கூடிய மக்கள் ஏழை எளிய மக்களாக இருந்தால், ஏன் என்றால் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் கூட அங்கே ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள், அவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற வகையிலேயும் ஆனால் அவர்கள் ஆலயத்தின் உரிமையை ஒப்புக்கொள்கின்ற வகையிலேயும் பிரச்சினை களைத் தீர்க்க வேண்டும் என்றுதான் அற நிலையத்துறை விரும்பு கிறது.

திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணியர் கோவில்

*வினா எண். 567—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணியர் கோவில் நிர்வாகத்தை மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலய நிர்வாகத்தில் இருந்து பிரிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) மதுரை திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணியசாமி கோவில் நிர்வாகத்தை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலின் நிர்வாகத்திலிருந்து பிரித்து தனியாக நிர்வாகம் செய்ய அரசாணை எண். 627, வணிக வரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 7–6–1979-ல் உத்தரவிடப்பட்டது.

(ஆ) இந்த ஆணையை எதிர்த்து ஒருவர் உயர்நீதி மன்றத்தில் நீதிப் பேராணை மனு தாக்கல் செய்து தடை உத்தரவு பெற்று வழக்கு நிலுவையில் இருப்பதால் மேற்படி இரு ஆலயங்களின் நிர்வாகமும் ஒருங்கிணைந்தே இயங்குகின்றன.

TRUTH ALONE TRIUMPHS

1981 மார்ச் 31]

[முற்பகல் 9.20]

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற நேரத்திலே, 1979 ஆம் ஆண்டிலேயே உயர் நீதிமன்றத்தில், இது சம்பந்தமான வழக்கு தொடரப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த இடைக்கால தடையை நீக்க, அல்லது இந்த வழக்கு முடிவடைவதற்கான நடவடிக்கைகளை எடுக்க அரசு என்ன முயற்சிகளை, உயர் நீதிமன்றத்தின் மூலமாக செய்து கொண்டிருக்கிறது. அப்படி திருப்பரங்குன்றம் கோவில் நிர்வாகத்தை மீனாட்சிசுந்தரேஸ்வரர் கோயில் நிர்வாகத்திலிருந்து பிரிப்பதால், சுப்பிரமணியர் கோவிலுக்கு வரும் அதிகமான வருவாயைக் கொண்டு அந்தப் பகுதிகளில் நல்ல பணிகள் பல செய்யப்படவிருக்கின்றன என்ற காரணத்தால் விரைவில், அதற்கான முயற்சிகளில் அரசு இறங்குமா என்றும் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அந்த நல்ல எண்ணத்தின் மீது தான், அருள்மிகு சுப்பிரமணியஸ்வாமி கோவிலினுடைய நிர்வாகம் தனியாக இயங்குமேயானால் அந்தக் கோவிலினுடைய நிர்வாகத்தை சிறப்பாக நடத்த முடியும், அதன் மூலமாக, அந்தப் பகுதிகளுக்கு சிறப்பான நல்ல பணிகள் செய்ய முடியும் என்ற எண்ணத்தினால் தான், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு, நமது அரசு ஆணை பிறப்பித்து, அந்த ஆணையின்படி நிர்வாக அலுவலர் கூட அங்கே நியமிக்கப்பட்டு விட்டார். அப்படி நியமிக்கப்பட்டு விட்ட ஒரு உத்தரவின் மீதுதான் நீதிமன்றம் தடை பிறப்பித்திருக்கிற ஒரு அற்புதம் நிகழ்ந்திருக்கிறது தடையை நீக்க வேண்டும் என்றுதான் மனு போட்டிருக்கிறோம். நீதிமன்றத்திற்கு என்று போய் விட்டால், எப்பொழுதும் முடியும் என்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துக் கொண்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்றுதோறும் ஆடி வருகிற குமரப் பெருமானுடைய அந்தத் திருத்தலத்திலே, அறுபடை வீடுகளுடைய மாதிரிகளைப் போல திருப்பரங்குன்றம் மலையின் மேலே அமைக்க விருக்கிற ஒரு எண்ணத்தை அரசு மேற்கொண்டிருக்கிறதா? அப்படியானால் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர் எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்கு தொடர்பு இல்லாத கேள்வி என்றாலும், தெரிந்திருக்கிற விபரத்தை அவைக்கு தெரிவித்து விடுகிறேன். அரசோ, அல்லது அறநிலையத் துறையோ அப்படிப்பட்ட ஒரு திட்டத்தினை அறிவிக்கவில்லை. அருள்மிகு சுப்பிரமணியஸ்வாமி ஆலயத்தினுடைய அறங்காவல் குழு, அந்த ஆலயத்தினுடைய சிறப்பை

மேலும் பெருக்குகிற வகையில், குமரனின் அறுபடை வீடுகளில் ஒரு படை வீடான அந்தத் திருப்பரங்குன்றத்திலேயே, மற்றப் படை வீடுகளுடைய மாதிரிகளை பொதுவாக அமைக்கிற வகையில் உருவாக்கினால், குமரனை தரிசிக்க வருகிறவர்களுக்கு சிறப்பாக அமையும் என்று உணர்ந்திருக்கிறார்கள். அதிலே கூட பொது மக்களிடம் இருந்து நன்கொடைகளாக வசூலித்து அமைக்கலாம் என்றுதான் ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே ஒருவர் திருச்செந்தூர் போன்ற ஆலயத்தை அமைப்பார்களேயானால், அதற்காக இரண்டு இலட்சம் தன்னுடைய செலவிலே தருவதாகச் தெரிவித்திருக்கிறார்கள். அது அற நிலயத்துறையின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு காலத்திலே மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்துடன், திருப்பரங்குன்றம் சுப்பிரமணியஸ்வாமி கோவில் நிர்வாகத்தையும் இணைந்து நடத்துவதற்கு, மீனாட்சி கோவிலினுடைய வருமானம் குறைவு என்பது ஒரு காரணமாக இருந்திருக்கிறது. ஆனால் இப்பொழுது இரண்டாகப் பிரிப்பதன் மூலம், மீனாட்சி கோவிலினுடைய வருமானம் உயர்ந்திருக்கிறதா ? அதனுடைய செலவுகளை தன்னிறைவாகச் செய்துக் கொள்ளக் கூடிய நிலைமையை அது அடைந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு காலத்திலே மீனாட்சி அம்மன் தன்னுடைய பிள்ளையை நம்பித்தான் வாழ வேண்டியவர்களாக இருந்தார்கள். ஆனால் இப்பொழுது தாயார் மிகப் பெரிய அளவிலே மக்களால் வணங்கப்படுகிற காரணத்தினால், மிகப் பெரிய அளவு வருமானத்தையும் பெற்றிருக்கிறார்கள். கடந்த ஆண்டு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலய வருமானம் 45,63,435. ஆனால் அதே நேரத்தில் திருப்பரங்குன்றம் சுப்பிரமணியஸ்வாமி கோவிலினுடைய வருமானம் 9,95,213. ஆகவே இரண்டு ஆலயங்களும் தனித் தனியாகவே, சிறந்த நிர்வாகத்தின் மூலம், வருமானத்தின் அடிப்படையில் நடைபெறுமேயானால், அது நலம் பயக்கும் என்று தான் அரசு ஆணை பிறப்பித்தது.

ஸ்ரீரங்கம் ராஜகோபுரத் திருப்பணி.

* வினா எண் 568—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஸ்ரீரங்கம் ராஜகோபுரம் திருப்பணி வேலை நடைபெற்று வருகின்றதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?